[8th August 1963

(c) the amount given to each hotel and the conditions under which it was given?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) & (c) Do not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : மற்ற மற்றத் தொழில்களுக்கு உதவி செய்வது போல் ஹோட்டல் வைக்கும் தொழிலுக்கும் அரசாங்கம் உதவி செய்ய முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அயல் நாட்டுப் பிரதிநிதிகள் தங்குவதற்கான விடுதிகள் நடத்தினுல் அவர்களுக்கு உதவி செய்யலாமா என்பதை பற்றிச் சர்க்கார் பரிசீலனை செய்யும். அதுவும் சர்க்கார் நேரடியாக உதவி கொடுக்காது. இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் மூலம் உதவி கொடுக்க முடியுமா என்பது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திரு. இராம. அரங்கண்ணல் : அப்படிப்பட்ட ஓட்டல்கள் அமைப்பதற்கு ஏராளமாகச் செலவாகின்ற காரணத்தால் சமுதாயத்தில் வசதியும், வாய்ப்பும் படைத்தவர்களுக்குத்தான் அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆகவே, சர்க்காரே அது போன்ற காரியங்களை எடுத்துச் செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தப் பணத்தைக் கொண்டு இன்னும் லாபகரமாக மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்ற காரணத்தால் சர்க்கார் இந்தத் தொழிலை எடுத்துக் கொள்ளாது.

நீதிபதிகள் இடமாற்றம்

*50 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட நீதிபதிகளையும் (District Judges) துணை நீதிபதிகளையும் (Sub-Judges) ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கு அரசாங்கம் கையாண்டுவரும் நடைமுறைக் கொள்கை என்ன ?

(இ) அந்த நடைமுறை கொள்கை உறுதியுடன் பின்பற்றப் படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) மாவட்ட நீதிபதிகளை மாற்றுவதை உயர்நீதி மன்றத்தைக் கலந்து, அரசாங்கம் முடிவு செய்கின்றது. நிர்வாக வசதியையும் பொது நலனையும் மனதிற் கொண்டு, உயர்நீதி மன்றம் அரசாங்கத்திற்கு உரிய சிபார்சுகள் செய்கிறது. கோடை விடுமுறையின்போது, பொதுவாக மற்ற அதிகாரிகளை மாற்றுகையில், இந்த நீதிபதிகளை மாற்றும் பிரச்னையும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

உப நீதிபதிகளை மாற்றுவதை, உயர்நீதி மன்றமே முடிவு செய்கிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

8th August 1963]

(a) Transfers of District Judges from one place to another are being done by Government on the recommendations of the High Court. High Court's recommendations are generally based on administrative grounds and are in the public interest. Such transfers are being taken up in every summer vacation along with general transfers.

Transfers of Sub-Judges are made by the High Court.

(b) Does not arise.

State Warehousing Corporation

* 51 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether there is any proposal to set up a State Warehousing Corporation as per Section 18 of the Warehousing Corporation Act, 1962 (Central); and

(b) if so, the details thereof?

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்: *(அ) & (இ) சென்னை மாநிலக் கிடங்கு வசதிக் கார்ப்பொரேஷன் 1956-ம் ஆண்டு விவசாயப் பொருள் (அபிவிருத்தி-கிடங்கு வசதிக்) கார்ப்பொரேஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 28/1956) 28-ம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. 1962-ம் ஆண்டு கிடங்கு வசதிக் கார்ப்பொரேஷன்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 43-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (g) பகுதியின்படி, சென்னை மாநிலக் கிடங்கு வசதிக் கார்ப்பொரேஷன் 1962-ம் ஆண்டு 58-வது மத்திய சட்டத்தின் கீழ் இம்மாநிலத்துக்காக அமைக்கப்பட்ட அரசாங்கக் கிடங்கு வசதிக் கார்ப்பொரேஷனைக் கருதப்பட வேண்டும். 1962-ம் ஆண்டு 58-வது மத்தியச் சட்டத்தின் 18-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்படி, அப் பிரிவில் (1) முதல் (3) வரையுள்ள உட்பிரிவுகளில் என்ன சொல்லியிருப்பினும், இம் மாநில அரசாங்கம் கார்ப்பொரேஷன் ஒன்றை அமைக்க வேண்டிய அவசியமில்லை.*

திரு. மீ. கலியாணசுந்தரம்: *கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலைப் புரிந்துகொள்வதே கஷ்டமாக இருக்கிறது. இப்போது அவர்கள் சொன்ன மூன்று சட்டங்களில் இருக்கக் கூடிய வேற்றுமைகள் ஒற்றுமைகள் என்ன? 1962-ம் வருஷத்திய சட்டத்தின்படி செய்ய வேண்டிய அவசியம் இல்லையென்ற முடிவுக்கு வரவேண்டிய காரணம் என்ன என்பதை விளக்கினால் மற்ற அங்கத்தினர்களுக்கும் புரியும்.*

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்: *'வேர் ஹவுசிங் கார்ப்பரேஷன்' அமைக்க வேண்டியது அவசியம் என்ற முறையில் நம்முடைய சென்னை அரசாங்கம் பாதிச் செலவும் மத்திய அரசாங்கம் பாதிச் செலவும் ஏற்று இருபது இடங்களில் கிடங்குகள் கட்டியிருக்கிறோம். விவசாயிகளுக்கு நல்ல முறையில் உபயோகப்பட வேண்டுமென்ற முறையில் மூட்டைகளை வைக்க,*